செ.வெ.எண்: 15-2016 நாள்: 09.12.2016

**13.12.2016 அன்று மிலாடி நபி தினம் அன்று விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள அரசு டாஸ்மாக் மதுபானக் கடைகள், அரசு டாஸ்மாக் மதுபானக் கூடங்கள் மற்றும் தனியார் மதுபானக் கூடங்கள் மூடப்பட வேண்டும். மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் உத்தரவு.**

*****

தமிழ்நாடு மதுபான சில்லறை வணிகம் (கடைகள் மற்றும் மதுபானக்கூடங்கள்) விதிகள் 2003 மற்றும் அரசாணையின்படி 13.12.2016 மிலாடி நபி தினம் அன்று அரசு டாஸ்மாக் மதுபானக் கடைகள், அரசு டாஸ்மாக் மதுபானக் கூடங்கள் மற்றும் தனியார் மதுபானக் கூடங்கள் மூடப்பட வேண்டும் என நெறிமுறை வரையறுக்கப்பட்டுள்ளது.

எனவே, எதிர்வரும் 13.12.2016 அன்று மிலாடி நபி தினம் அன்று விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள அனைத்து அரசு டாஸ்மாக் மதுபானக் கடைகள், அரசு டாஸ்மாக் மதுபானக் கூடங்கள் மற்றும் தனியார் மதுபானக் கூடங்கள் ஆகிய அனைத்தும் மூடப்பட வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் உத்திரவிட்டுள்ளார்.

மாவட்ட ஆட்சியர் அவர்களின் உத்தரவின்படி 13.12.2016 (செவ்வாய் கிழமை) மிலாடி நபி தினம் அன்று விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள அனைத்து அரசு டாஸ்மாக் மதுபானக் கடைகள், அரசு டாஸ்மாக் மதுபானக் கூடங்கள் மற்றும் தனியார் மதுபானக் கூடங்கள் இயங்காது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

---

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், விழுப்புரம்.